# தேசிய விளையாட்டு நிதியம்

## பணிக்கூற்று

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கள் தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளாகும்.

## நோக்கு

விளையாட்டு வீர வீராங்கனைககளின் இயலுமைகளை விருத்தி செய்தல்

## சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தினால் தேசிய விளையாட்டு நிதியம் தாபிக்கப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறக்கூடிய நிதி, வெளிநாடொன்றிலிருந்து கிடைக்கப்பெறும் உதவி நிதி, யாதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு விழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதலின் பொருட்டு யாதேனும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி, யாரேனும் நபர் ஒருவரிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பபெறும் பணம், வேறு வழிகளால் கிடைக்கப்பபெறும் பணம் இந்நிதியத்திற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். அமைச்சரினால் நிச்சயிக்கப்படக் கூடிய நிதியளவுகள் இலங்கையில் யாதேனும் விளையாட்டொன்றிற்கு ஊக்கமளித்தல், முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் பொருட்டும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு கருணை கொண்ட கொடுப்பனவுகளாகவும், முதலீடு செய்வதன் பொருட்டும் இச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு அல்லது வலுப்படுத்தும் பணிகளின் பொருட்டும் நிதியத்தினால் நிதியினை செலுத்த முடியும்.

# 2018 ஆம் வருடத்திற்கான வருடாந்த நிர்வாக அறிக்கை

2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடம் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் வருடாந்த அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

## சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரையுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

## தேசிய விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்

விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக இலங்கையின் விளையாட்டினது அபிவிருத்தியின் பொருட்டு விளையாட்டுடன் தொடர்புடைய மனித வளங்களான விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் அவ்வாறே விளையாட்டுத்துறையின் பௌதீக மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டு காணப்படும் நிதி ஏற்பாட்டின் கீழ் நிதியானது வழங்கப்படுதல் நிகழ்த்தப்படுகின்றது.

தற்காலத்தில் விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மேலே குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக காலத்திற்குப் பொருந்தும் விதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது சர்வதேசப் போட்டி வெற்றிகளின் பொருட்டு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், இனங்காணப்பட்டுள்ள நியதிகளின் கீழ் மாதாந்தம் வீரர்களின் பொருட்டு நிகழ்த்தப்படும் போசணைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், விளையாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட விஷேட வேண்டுகோள்கள் தொடர்பாக வழங்கப்படும் கொடுப்பனவுகள், தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமுடைய விளையாட்டு விழாக்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரிசு வழங்குதல்கள், விஷேட அளிப்புக்கள் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் தொடர்பாக நிகழ்த்தப்படும் விளையாட்டு விழாக்களின் பொருட்டான கொடுப்பனவுகள், விளையாட்டு வீரர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் போது / விளையாட்டிலிருந்து விடைபெறும்போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமடைய விளையாட்டு உபகரணங்களின் வேண்டுகோள்களுக்கு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் தொடர்பாக பல்வேறுபட்ட அணிகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், கருணை அடிப்படையிலான காரணங்களின் மீது விளையாட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தியினது எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் வேறு கொடுப்பனவுகள் என்பனவாகும்).

## விளையாட்டுச் சம்மேளனங்களுக்கு வழங்கப்பட்ட நிதி

பல்வகைப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டுச் சம்மேளனங்களுக்கு ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்காக செயற்படுவதன் வாயிலாக 2018 ஆம் வருடத்தினுள் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் பலவற்றிற்கு விளையாட்டு வீர வீராங்கனைகள் பங்குபற்றச் செய்யப்பட்டனர். விளையாட்டுச் சம்மேளனங்களின் வேண்டுகொள்களைக் கருத்திற்கொண்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியளவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | விளையாட்டுச் சம்மேளனங்கள் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|
| 1. | விளையாட்டுக் கழகங்கள் (ஆசிய கயிறிழுத்தல் போட்டித் தொடருக்கு அனுசரணையினை வழங்குவதன் பொருட்டு) | 3,000,000.00 |
| 2. | தேசிய விளையாட்டுச் சபை | 24,000.00 |
| | **மொத்தம்** | **3,024,000.00** |

## விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி வழங்கள்

| தொடர் இலக்கம் | விடயம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|
| 1. | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக போசணைக் கொடுப்பனவு (தற்போது விளையாட்டில் ஈடுபடும் பின்வரும் குழாம்கள் மற்றும் அணிகள் தொடர்பாக இதன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டது)<br>➢ கனிட்ட மெய்வல்லுநர் வீரர்கள்<br>➢ பாரந்தூக்கற் குழாம்<br>➢ றக்பி வீரர்கள்<br>➢ கராத்தே குழாம்<br>➢ மெய்வல்லுநர் குழாம்<br>➢ பொதுநலவாய நாடுகளின் 22 ஆவது தொடரின் பொருட்டு<br>➢ ஆசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டித் தொடரில் பதக்கங்களை வெற்றிகோண்டோர் மற்றும் பயிற்றுவிப்பாளரின் பொருட்டு கொடுப்பனவுகளை அளித்தல் | 21,075,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கள்கள்<br>➢ கராத்தே வீராங்கனைக்கு பாதணிகளை வழங்குதல்<br>➢ வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் 12 வீராங்கனைகளின் பொருட்டு பாதணிகளை வழங்குதல்<br>➢ நீச்சற் தொகுதிகளை வழங்குதல் | 294,500.00 |
| 3. | ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்களுக்கான கொடுப்பனவுகள்<br>வெற்றியீட்டிய வீர வீராங்கனைகள் 9 பேருக்கு ரூ. 75,000 வீதம் 2018 ஆகச்ட் தொடக்கம் 2018 ஒக்டோபர் வரையில் 3 மாதம் தொடர்பாக | 2,025,000.00 |
| | **மொத்தம்** | **23,394,500.00** |

## விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி வழங்கள்

2018 ஆம் வருடத்தினுள் இலங்கையினுள் நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் பங்களிப்பானது கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | விடயம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|
| 1. | தேசிய விளையாட்டுப் பெருவிழா கொடுப்பனவு | 7,233,800.00 |
| 2. | சர்வதேசப் போட்டிகள் | 3,798,820.00 |
| | **மொத்தம்** | **11,032,620.00** |

## வரவேற்பு மற்றும் உபசரணை

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளின் போது விசேட திறமைகளை வெளிக்காட்டி நாட்டிற்குப் புகழினை ஈட்டித் தந்து தற்போது ஓய்வு நலத்திலுள்ள மற்றும் தற்போதும் விளையாட்டில் செயலாற்றுகையுடன் திகழும் விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாக உபகாரமளித்தல் மற்றும் அதியுயர் வெற்றிகளை ஈட்டி தாய்நாட்டிற்கு வருகை தரும்போது கௌரவமிக்க வரவேற்பு ஒன்றினை அளிப்பதன் பெருட்டும் நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்ளுவதற்கு 2018 ஆம் வருடத்தினுள் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பாக வழங்கப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | விடயம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|
| 1. | விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பான உபகாரங்கள்<br>➢ பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டித் தொடரின் பொருட்டு பங்குபற்றி வெற்றியீட்டிய வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் உள்ளடங்களாக 18 பேருக்கு கொடுப்பனவு செய்தல் (ரூ. 23,750,000.00)<br>➢ ஈட்டியெறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வெற்றியீட்டிய வீரனின் பயிற்றுவிப்பாளருக்குப் பணப்பரிசிலினை வழங்குதல் (ரூ. 225,000.00) | 23,975,000.00 |
| | **மொத்தம்** | **23,975,000.00** |

## வேறு செலவினங்கள்

2018 ஆம் வருடத்தினுள் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களது அங்கீகாரத்திற்கமைய மேற்கொள்ளப்பட்ட வேறு செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | விடயம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூ.) |
|---|---|---|
| 1 | நானாவித செலவினங்கள்<br>➢ இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு அனுசரணையினை வழங்குதல்<br>➢ தொழில்ரீதி விளையாட்டு செய்தியாளர்களின் சங்கத்திற்கு அனுசரணையினை வழங்குதல்<br>➢ விளையாட்டு வீரர்களின் பொருட்டு விமானப் பயணச் சீட்டுக்கள் தொடர்பாக அனுசரணையினை வழங்குதல்<br>➢ இலங்கை குத்துச்சண்டை சங்கத்தின் தேசிய போட்டிகள் தொடர்பாக அனுசரணையினை வழங்குதல்<br>➢ விளையாட்டு போட்டிகளின் ஊடக பிரசாரத்தின் பொருட்டு ஊடகவியலாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் | 10,522,530.64 |
| 2 | நிர்வாகச் செலவினங்கள் (தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக) | 509,250.00 |
| 3 | தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கு தொடர்பான செலவினங்கள்<br>➢ மாதாந்த மின்சாரம், நீர், பாதுகாப்பு, துப்புரவு செய்தல் என்பனவற்றிற்கான கொடுப்பனவு | 7,881,346.94 |
| 4 | வேறு கொடுப்பனவுகள் | 587,430.16 |
| 5 | மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு (இலங்கையில் இடம்பெற்ற)<br>➢ வெளிநாட்டு வளவாளர்களின் விமானப் பயணச் சீட்டுக்கள் தொடர்பாக<br>➢ மாநாட்டு நிகழ்ச்சிகளின் முகாமைத்துவம் தொடர்பாக | 7,049,997.36 |
| | **மொத்தம்** | **26,550,555.10** |

## 2018 ஆம் வருடத்தினுள் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஆற்றுகைகள்

இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளின் போது பெற்றுக்கொண்ட பதக்கங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மேற்படி ஆற்றுகைகளை வெளிப்படுத்துவதற்காக தேசிய விளையாட்டு நிதியத்தினால் விசேட பங்பங்களிப்புக்களை வழங்குவதற்கு இயன்றது.

| இலக்கம் | விளையாட்டு | போட்டித் தொடர் | இடம்பெற்ற நாடு | பதக்கங்கள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | |
| 1 | வூசு | தெற்காசிய வூசு போட்டித் தொடர் | பாக்கிஸ்தான் | 6 | 1 | 3 | 10 |
| 2 | பாரந்துாக்கல் | பொதுநலவாய நாடுகள் மெய்வல்லுநர் போட்டித் தொடர் | அவுஸ்திரேலியா | | 1 | 2 | 3 |
| 3 | குத்துச்சண்டை | | | | | 3 | 3 |
| 4 | 400 மீற்றர் (உள்ளக) | 8 ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டித் தொடர் | ஈரான் | 1 | | 1 | 2 |
| 5 | நீளம் பாய்தல் | | | | | 1 | 1 |
| 6 | 800 மீற்றர் | | | | | 1 | 1 |
| 7 | 800 மீற்றர் | தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டித் தொடர் | தாய்லாந்து | 1 | | | 1 |
| 8 | நீளம் பாய்தல் | | | 1 | | 1 | 2 |
| 9 | உயரம் பாய்தல் | | | 1 | | | 1 |
| 10 | ஈட்டி எறிதல் | | | 1 | | | 1 |
| 11 | 400 மீற்றர் | | | 1 | | | 1 |
| 12 | 200 மீற்றர் | | | | 1 | | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | 400 மீற்றர் சட்டவேலி ஓட்டம் | தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டித் தொடர் | தாய்லாந்து | | 1 | | 1 |
| 14 | சப்த நிகழ்ச்சி | | | | | 1 | 1 |
| 15 | 400 மீற்றர் சட்டவேலி ஓட்டம் | | | | | 1 | 1 |
| 16 | 400 மீற்றர் (ஆண்கள்) | 18 ஆவது ஆசிய விளையாட்டு விழாவிற்கு அண்மித்ததாக இடம்பெற்ற அழைப்புப் போட்டித் தொடர் | இந்தோனேசியா | 1 | | | 1 |
| 17 | 400 மீற்றர் (பெண்கள்) | | | | | 1 | 1 |
| 18 | 400 மீற்றர் (ஆண்கள்) | | | 1 | | 1 | 2 |
| 19 | ஈட்டி எறிதல் (ஆண்கள்) | | | | 1 | | 1 |
| 20 | ஈட்டி எறிதல் (பெண்கள்) | | | 1 | | | 1 |
| 21 | நீளம் பாய்தல் (ஆண்கள்) | 18 ஆவது ஆசிய விளையாட்டு விழாவிற்கு அண்மித்ததாக இடம்பெற்ற அழைப்புப் போட்டித் தொடர் | இந்தோனேசியா | | | 1 | 1 |
| 22 | 1500 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | | 1 |
| 23 | 3000 மீற்றர் ஸ்டீபல்சேஸ் (பெண்கள்) | | | 1 | | | 1 |
| 24 | தசம நிகழ்ச்சி (ஆண்கள்) | | | | 1 | | 1 |
| 25 | முப்பாய்ச்சல் (பெண்கள்) | | | | 1 | 1 | 2 |
| 26 | 5000 மீற்றர் (ஆண்கள்) | | | | | 1 | 1 |
| 27 | 3000 மீற்றர் ஸ்டீபல்சேஸ் (ஆண்கள்) | | | 1 | | | 1 |
| 28 | 800 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | 1 | 2 |
| 29 | 4 X 400 மீற்றர் (ஆண்கள்) | | | | | 1 | 1 |
| 30 | 4 X 100 மீற்றர் (ஆண்கள்) | | | | 1 | | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 31 | 400 மீற்றர் (பெண்கள்) | 18 ஆவது ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் போட்டித் தொடர் | ஜப்பான் | | 1 | | 1 |
| 32 | 400 மீற்றர் (ஆண்கள்) | | | 1 | 1 | | 2 |
| 33 | 100 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | | 1 |
| 34 | 3000 மீற்றர் ஸ்டீபல்சேஸ் (பெண்கள்) | | | 1 | | | 1 |
| 35 | 800 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | | 1 |
| 36 | 200 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | | 1 |
| 37 | 4 X 400 மீற்றர் பெண்கள்) | | | | | 1 | 1 |
| 38 | 4 X 400 மீற்றர் (ஆண்கள்) | மலேசிய திறந்த மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் போட்டித் தொடர் | மலேசியா | 1 | | | 1 |
| 39 | 100 மீற்றர் (ஆண்கள்) | | | 1 | | | 1 |
| 40 | 100 மீற்றர் (பெண்கள்) | | | | 1 | | 1 |
| 41 | 400 மீற்றர் (ஆண்கள்) | | | 1 | | | 1 |
| 42 | 400 மீற்றர் சட்டவேலி ஓட்டம் | | | 1 | | | 1 |
| | **மொத்தம்** | | | **23** | **16** | **22** | **61** |
| 43 | கரம் (ஆண்கள்) | சர்வதேச கரம் வீரமுதன்மைத் தொடர் | கொரியா | வீரமுதன்மை | | | |
| 44 | கரம் (பெண்கள்) | | | உப வீரமுதன்மை | | | |
| 45 | வலைப்பந்தாட்டம் | ஆசிய வலைப்பந்தாட்ட வீரமுதன்மைத் தொடர் | சிங்கப்பூர் | வீரமுதன்மை | | | |

## நன்றி நவிலல்

தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களின், விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களது மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலினை மிக மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

டப்லிவ்.ஏ. சூலாநந்த பெரேரா
செயலாளர்
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## தேசிய விளையாட்டு நிதியம்

## 2018-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக கிடைப்பனவு கொடுப்பனவுக் கணக்கு

| 2017 கிடைப்பனவு | கோட் இல. 1 | கோட் இல. 2 | கோட் இல. 3 | கணக்கின் பெயர் மற்றும் விபரம் | கணக்குக் குறிப்பு | கிடைப்பனவு 2018 | கிடைப்பனவு 2018 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. சதம் | | | | | | ரூ. சதம் | ரூ. சதம் |
| 11,860,219.49 | | | | சனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை | | | 7,003,260.02 |
| 5,000,000.00 | 011 | 000 | 00 | நிலையான வைப்புக்களை மீள எடுத்தல் | | 29,341,147.25 | |
| 2,405,730.40 | 020 | 000 | 00 | நிலையான வைப்புகளுக்கான வட்டி | | 725,821.90 | |
| 29,000,000.00 | 041 | 000 | 00 | வருமானம் – தேசிய லொத்தர் சபை | | 25,000,000.00 | |
| 19,500,000.00 | 001 | 000 | 00 | நன்கொடைகள் | | 11,500,000.00 | |
| 5,458,334.00 | 060 | 000 | 00 | பல்வேறுபட்ட வைப்புக்கள் | | 1,649,580.00 | |
| 19,712.00 | 064 | 000 | 00 | செலவினத் தலைப்புக்களுக்கான வைப்பு | | 77,750.00 | |
| 185,186.50 | 066 | 001 | 00 | கொடுப்பனவு மீளக் கிடைக்கப்பெறல் | | | |
| 4,975,885.22 | 065 | 000 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு | | 3,166,975.00 | |
| 1.00 | 066 | 000 | 000 | வேறு வருமானங்கள் | | 803,008.00 | |
| | | | | அனுசரணைக் கிடைப்பனவு | | 1,500,000.00 | |
| | 068 | 000 | 00 | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | 1,575,000.00 | |
| | 070 | 000 | 00 | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு | | 7,833,779.00 | |
| | | | | முற்பணம் | | 10,000,000.00 | |
| 78,405,068.61 | | | | கிடைப்பனவு மொத்தம் | | 93,173,061.15 | 100,176,321.17 |

| 2017 கொடுப்பனவு | | | | | | 2017 கொடுப்பனவு | 2017 கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|
| 32,500.00 | 021 | 000 | 00 | சர்வதேச போட்டிகள் | | 3,798,820.00 | |
| 657,677.00 | 026 | 000 | 00 | நிர்வாகச் செலவினங்கள் | | 509,250.00 | |
| 600,000.00 | 027 | 002 | 00 | வேறு கொடுப்பனவுகள் | | 587,430.16 | |
| 733,311.40 | 028 | 000 | 00 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள் | | 294,500.00 | |
| 83,500.00 | 029 | 000 | 00 | அறிக்கையிடுவோரின் வெளிநாட்டுச் சுற்றுலா | | | |
| 20,100,000.00 | 033 | 000 | 00 | விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு | | 21,075,000.00 | |
| 1,050,000.00 | 037 | 000 | 00 | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள் | | | |
| 24,215,500.00 | 038 | 000 | 00 | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு | | 23,975,000.00 | |
| | 040 | 035 | 00 | இலங்கை பாடசாலைகள் றக்பி உதைப்பந்தாட்ட சங்கம் | | | |
| | 040 | 035 | 00 | அகில இலங்கை கராத்தே சங்கம் | | | |
| 381,500.00 | 040 | 035 | 00 | விளையாட்டுக் கழங்கள் | | 3,000,000.00 | |
| 200,000.00 | 040 | 035 | 00 | மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம் | | | |
| 504,000.00 | 040 | 035 | 00 | இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம் | | | |
| 8,796,050.00 | 046 | 005 | 00 | தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு | | 7,233,800.00 | |
| 8,122,633.00 | 047 | 000 | 00 | பல்வேறுபட்ட செலவினங்கள் | | 10,522,530.64 | |
| | 052 | 000 | 00 | விளையாட்டுச் சபை | | 24,000.00 | |
| 2,158,884.00 | 060 | 001 | 00 | நானாவித வைப்புக்கள் | | 495,480.00 | |
| 15,000.00 | 065 | 002 | 00 | எரிபொருள் முற்பணம் | | 65,580.00 | |
| 39,666.00 | 065 | 003 | 00 | நட்டங்கள் சேதங்கள் முற்பணம் | | | |
| 226,826.10 | 065 | 004 | 00 | பல்வகைப்பட்ட முற்பணம் | | 167,655.00 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3,484,761.09** | **065** | **001** | **00** | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - செலவினம் | | **7,648,111.94** | |
| | **070** | **000** | **00** | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | **2,025,000.00** | |
| | **068** | **001** | **00** | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு | | **7,049,997.36** | |
| | | | | முற்பணம் | | **10,000,000.00** | |
| **71,401,808.59** | | | | மொத்தம் | | | **98,472,155.10** |
| **7,003,260.02** | | | | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலுவை** | | | **1,704,166.07** |

## தேசிய விளையாட்டு நிதியம்
## 2018-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக நிலுவை வெளிப்பாடுகள்

| கோட் இல. 1 | கோட் இல. 2 | கோட் இல. 3 | கணக்கின் பெயர் மற்றும் விபரம் | கணக்குக் குறிப்பு | செலவு ரூ. சதம் | வரவு ரூ. சதம் |
|---|---|---|---|---|---|---|
| 002 | 000 | 00 | திரண்ட நிதியம் 2018.01.01 ஆம் திகதிக்கு | | | 159,953,437.42 |
| 011 | 000 | 00 | முதலீட்டுக் கணக்கு 2018.12.31 ஆம் திகதிக்கு | | 125,773,894.48 | |
| 013 | 000 | 00 | கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி 2018.12.31 ஆம் திகதிக்கு | 05 | 6,956,829.90 | |
| 013 | 000 | 00 | கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி 2016.12.31 ஆம் திகதிக்கு | | | |
| 017 | 000 | 00 | கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் - தேசிய லொத்தர் சபை | 06 | 4,703,968.97 | |
| 020 | 000 | 00 | நிலையான வைப்புக்கள் முதலீட்டு வட்டி | 04 | | 13,650,270.27 |
| 021 | 000 | 00 | சர்வதேச போட்டிகள் | | 3,798,820.00 | |
| 026 | 000 | 00 | நிர்வாகச் செலவினங்கள் | | 466,500.00 | |
| 027 | 002 | 00 | வேறு கொடுப்பனவுகள் | | 587,430.16 | |
| 033 | 000 | 00 | விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவுகள் | | 20,775,000.00 | |
| 038 | 000 | 00 | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு | | 23,975,000.00 | |
| 028 | 000 | 00 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள் | | 294,500.00 | |
| 040 | 035 | 00 | விளையாட்டுக் கழகங்கள் | | 3,000,000.00 | |
| 041 | 000 | 00 | வருமானம் – தேசிய லொத்தர் சபை | 06 | | 21,649,250.00 |
| 043 | 000 | 00 | கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு | | 180,000.00 | |
| 043 | 001 | 00 | கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு | 07 | | 720,000.00 |
| 046 | 005 | 00 | தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு | | 7,233,800.00 | |
| 047 | 000 | 00 | பல்வேறுபட்ட கொடுப்பனவுகள் | | 10,522,530.64 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 050 | 000 | 00 | நிதி நிலுவை | | 1,704,166.07 | |
| 060 | 000 | 00 | பல்வேறுபட்ட வைப்புக்கள் | 08 | | 4,481,664.00 |
| 066 | 000 | 00 | கொடுப்பனவுகள் மீளக் கிடைக்கப்பெறல் | 01 | | |
| 001 | 000 | 00 | நன்கொடைகள் | | | 11,500,000.00 |
| 038 | 000 | 00 | போசணைக் கொடுப்பனவு - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய | | | |
| 066 | 000 | 00 | வேறு வருமானங்கள் | | | 803,008.00 |
| 064 | 000 | 00 | செலவினத் தலைப்புக்களுக்கான வரவு | | | |
| 011 | 001 | 00 | முதலீட்டு வருமான இணக்கக் கணக்கு | | 123,160.80 | |
| 065 | 002 | 00 | எரிபொருள் முற்பணம் | | 50,580.00 | |
| 065 | 004 | 00 | பல்வகைப்பட்ட முற்பணம் | | 147,655.00 | |
| 065 | 001 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - செலவினம் | | 7,766,918.72 | |
| 065 | 000 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு - கிடைப்பனவு | | | 2,989,475.00 |
| 065 | 002 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினம் | | | 508,868.41 |
| 065 | 000 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு - கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் | | 5,000.00 | |
| | | | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு - கிடைக்கப்பெற வேண்டிய | | 110,000.00 | |
| | | | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | | 1,875,000.00 |
| | | | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு | | | 7,943,779.00 |
| | | | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் கிடைக்கப்பெற வேண்டிய | | 300,000.00 | |
| | | | கொடுப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | 2,025,000.00 | |
| | | | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு - கொடுப்பனவு | | 7,049,997.36 | |
| | | | அனுசரணை கிடைப்பனவு | | | 1,500,000.00 |
| 052 | 000 | 00 | விளையாட்டுச் சபை | | 24,000.00 | |
| | | | | | 227,574,752.10 | 227,574,752.10 |

# தேசிய விளையாட்டு நிதியம்
## 2018-12-31 ஆம் திகதி நிறைவுற்ற வருடம் தொடர்பாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கு

| வருமானம் 2017 மீளளிக்கப்பட்ட ரூ. சதம் | குறிப்பு | கோட் இல. 1 | கோட் இல. 2 | கோட் இல. 3 | கணக்கின் பெயர் மற்றும் விபரம் | கணக்குக் குறிப்பு | கிடைப்பனவு 2018 ரூ. சதம் | கிடைப்பனவு 2018 ரூ. சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **வருமானம்** | | | |
| **14,792,802.70** | | **020** | **000** | **00** | முதலீடு மீதான வட்டி | | **13,650,270.27** | |
| **24,551,128.97** | | **041** | **000** | **00** | வருமானம் – தேசிய லொத்தர் சபை | | **21,649,250.00** | |
| **185,186.50** | | **066** | **000** | **00** | கொடுப்பனவு மீளக் கிடைக்கப் பெறல் | | | |
| **19,500,000.00** | | **001** | **000** | **00** | நன்கொடைகள் | | **11,500,000.00** | |
| | | **060** | **000** | **00** | பல்வேறுபட்ட வைப்புக்கள் | | | |
| **1.00** | | **066** | **000** | **00** | வேறு வருமானங்கள் | | **803,008.00** | |
| **5,158,385.22** | | **065** | **000** | **00** | தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி | | **2,989,475.00** | |
| **4,278.35** | | **020** | **000** | **00** | முதலீட்டு வருமான இணக்கம் | | | |
| | | | | | அனுசரணைக் கிடைப்பனவு | | **1,500,000.00** | |
| | | | | | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | **1,875,000.00** | |
| | | | | | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு | | **7,943,779.00** | |
| **64,191,782.74** | | | | | **மொத்த வருமானம்** | | | **61,910,782.27** |

➡

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | <u>செலவினம்</u> | | | |
| 657,677.00 | | 026 | 000 | 00 | நிர்வாகச் செலவினங்கள் | | 466,500.00 | |
| 733,311.40 | | 028 | 000 | 00 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள் | | 294,500.00 | |
| 83,500.00 | | 029 | 000 | 00 | அறிக்கையிடுவோர்களின் வெளிநாட்டுச் சுற்றுலா | | | |
| 20,400,000.00 | | 033 | 000 | 00 | விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு | | 20,775,000.00 | |
| 381,500.00 | | 040 | 035 | 00 | விளையாட்டுக் கழகங்கள் | | 3,000,000.00 | |
| 200,000.00 | | 040 | 035 | 00 | மாத்தறை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம் | | | |
| 504,000.00 | | 040 | 035 | 00 | இலங்கை ஜிம்நாஸ்டிக் சங்கம் | | | |
| 1,050,000.00 | | 037 | 000 | 00 | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவிகள் | | | |
| 24,185,500.00 | | 038 | 000 | 00 | விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு | | 23,975,000.00 | |
| 32,500.00 | | 021 | 000 | 00 | சர்வதேசப் போட்டிகள் | | 3,798,820.00 | |
| 180,000.00 | | 043 | 000 | 00 | கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு | | 180,000.00 | |
| 8,796,050.00 | | 046 | 004 | 00 | தேசிய விளையாட்டுப் பெருவிழாவிற்குக் கொடுப்பனவு | | 7,233,800.00 | |
| 8,122,633.00 | | 047 | 000 | 00 | பல்வேறுபட்ட கொடுப்பனவுகள் | | 10,522,530.64 | |
| 600,000.00 | | 027 | 002 | 00 | வேறு கொடுப்பனவுகள் | | 587,430.16 | |
| 6,000.00 | | 065 | 002 | 00 | எரிபொருள் முற்பணம் | | 50,580.00 | |
| 214,809.10 | | 065 | 004 | 00 | பல்வகைப்பட்ட முற்பணம் | | 147,655.00 | |
| 3,868,907.72 | | 065 | 001 | 00 | தியகம மகிந்த ராஜபக்ஷவிளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி | | 7,766,918.72 | |
| | | 052 | 000 | 00 | விளையாட்டுச் சபை | | 24,000.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | அனுசரணை கிடைப்பனவு - ஆசிய கனிட்ட மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | **2,025,000.00** | |
| | | | | | 2018 மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச மாநாடு | | **7,049,997.36** | |
| | | **020** | **000** | **00** | முதலீட்டு வருமான இணக்கம் | | **123,160.80** | |
| **70,016,388.22** | | | | | மொத்தச் செலவினம் | | | **88,020,892.68** |
| **(5,824,605.48)** | | | | | மிகை | | | **(26,110,110.41)** |

## தேசிய விளையாட்டு நிதியம்

## 2018.12.31 ஆம் திகதிக்கு ஐந்தொகை

| கோட் இல. 1 | கோட் இல. 2 | கோட் இல. 3 | குறிப்பு | கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள் | கணக்குக் குறிப்பு | 2017 மீளளிக்கப்பட்ட ரூ. சதம் | 2018 ரூ. சதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **சொத்துக்கள்** | | | |
| **050** | **000** | **00** | | நிதி நிலுவை | | **7,003,260.02** | **1,704,166.07** |
| | | | **09** | கிடைக்கப்பெற வேண்டிய விசேட முற்பணம் | | | **-** |
| | | | | பல்வகைக் கடன்படுனர் | **03** | **14,747,288.58** | **12,075,798.87** |
| | | | | | | **21,750,548.60** | **13,779,964.94** |
| | | | | **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| | | | **09** | முதலீட்டுக் கணக்கு | | **142,760,514.45** | **125,773,894.48** |
| | | | | | | | |
| | | | | மொத்தச் சொத்துக்கள் | | **164,511,063.05** | **139,553,859.42** |
| | | | | பொறுப்புக்கள் | | | |
| | | | | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| **060** | **000** | **00** | | பல்வகை வைப்புக்கள் | **08** | **3,327,564.00** | **4,481,664.00** |
| **018** | **000** | **00** | | திரண்ட செலவினங்கள் | **07** | **1,230,061.63** | **1,228,868.41** |
| | | | | ஒதுக்கீடுகள் | | **4,557,625.63** | **5,710,532.41** |
| | | | | நடைமுறையல்லா பெறுப்புக்கள் | | | |
| | | | | மொத்தப் பொறுப்புக்கள் | | **4,557,625.63** | **5,710,532.41** |
| | | | | தேறிய சொத்துக்கள் | | **159,953,437.42** | **133,843,327.01** |
| | | | | | | | |
| | | | | **தேறிய சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| **002** | **000** | **00** | **09** | திரண்ட நிதி | **11** | **159,953,437.42** | **133,843,327.01** |
| | | | | | | | |
| | | | | மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள் | | **159,953,437.42** | **133,843,327.01** |

## தேசிய விளையாட்டு நிதியம்

**2018.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த வருடம் தொடர்பாக நிதிப்பாய்ச்சல் கூற்று**

| விபரம் | நிதி | நிதி |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **அமுல்படுத்தற் செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்கள்** | | |
| | | |
| வருடத்திற்கான மிகை | **(26,110,110.41)** | **(26,110,110.41)** |
| | | |
| **நிதியல்லாத மாற்றங்கள்** | | |
| கடன்படுநர் குறைவடைதல் | **2,671,489.71** | |
| பல்வகைப்பட்ட வைப்புக்கள் அதிகரித்தல் | **1,154,100.00** | |
| பல்வகைப்பட்ட கடன்படுநர் அதிகரித்தல் | **(1,193.22)** | |
| | | |
| அமுல்படுத்தற் செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல் | | |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்** | | |
| | | |
| நிலையான வைப்புக்கள் குறைவடைதல் | **(16,986,619.97)** | |
| | | |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல் | | |
| | | |
| நிதி அல்லது நிதிக்குச் சமமானமானவற்றின் தேறிய அதிகரிப்பு | | **(5,299,093.95)** |
| காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தான நிதி அல்லது நிதிக்குச் சமானமானவைகள் | | **7,003,260.02** |
| காலப்பகுதியின் நிறைவுற்றபோதான நிதி அல்லது நிதிக்குச் சமானமானவைகள் | | **1,704,166.07** |

# தேசிய விளையாட்டு நிதியம்

## 2018.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த வருடம் தொடர்பாக உரிமையாண்மை மாற்றக் கூற்று

| 2018 மீளளிக்கப்பட்ட ரூ. சதம் | குறிப்பு | கணக்கின் பெயர் மற்றும் விபரங்கள் | 2018 ரூ. சதம் |
|---|---|---|---|
| | | | |
| 165,778,042.90 | | 2018.01.01 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம் | 159,953,437.42 |
| | | | |
| | | | |
| (5,824,605.48) | | 2018 ஆம் வருடத்தில் பற்றாக்குறை | (26,110,110.41) |
| | | | |
| **159,956,437.42** | | **2018.12.31** ஆம் திகதிக்கு திரண்ட நிதியம் | **133,843,327.01** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

*(தமிழ் மொழிபெயர்ப்பு)*

CAS/A/NSF/6/18/11 2019 மே 24 ஆம்

திகதி
செயலாளர்,
தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

**தேசிய விளையாட்டு நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவடையும் வருடம் தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடையும் வருடம் தொடர்பாகவான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு, உரிமையாண்மை மாற்றமடைதலின் கூற்று மற்றும் அத்தினம் நிறைவடையும் வருடம் தொடர்பாக காசுப்பாய்ச்சற் கூற்றுக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின், 154(6)

உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை மற்றும் அத் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாக அதன் நிதிச் செயற்படுதன்மை மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கையின் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினை பிரதிபலிக்கும் என்பது நான் கொள்ளும் அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------

இலங்கையின் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.கவு.நி) ஏற்ப என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்தின் பொருட்டு அடிப்படையொன்றினை வழங்கும் நோக்கில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான ரீதியில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுவதன் பொருட்டு அவசியமாக அமையப்பெறும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தேச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமையினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு எண்ணுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டால், தவிர, தொடர்ச்சியாக நிலவும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான நிலைத்திருக்கைக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்றொடர் சம்மந்தப்பட்ட பொறுப்பு, ஆளும் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகுமாறு சொந்த வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஏற்றவிதமாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்பாடொன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதி வழங்குகை உயர்ந்த மட்டத்திலான உறுதி வழங்குகையாயினும், இலங்கை பொதுக் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அவை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருண்மையான வழுக் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்ளுவதாகவான உறுதிப்படுத்தப்படுதலாக ஆகப் பெறாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டானதான தாக்கத்தினால் பொருண்மையான வழுக்கூற்றுக்கள் ஏற்படக் கூடியதுடன், இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீது தாக்கஞ் செலுத்த இயலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
என்னால் தொழில்ரீதி மத்தியத்துவம் மற்றும் தொழில்ரீதி சிக்கனத்துடன் இலங்கை கணக்காய்வு நியமயங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காணும் போதும் மதிப்பாய்வு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உகந்த கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுதலின் வாயிலாக மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு, போதுமானளவு போலியான கூற்றுக்களினால் நிகழக்கூடிய தாக்கங்களை விட மோசடிகளால் நிகழும் தாக்கம் பாரியதாவதுடன், உள்கூட்டுக்கள், போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடியொன்று ஏற்படுவதற்குக் காரணமாகும்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாக உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடலின் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டதாயினும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை வெளியிட எண்ணவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வ தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் தகவுநிலை மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீது அடிப்படையாக கணக்கீடு தொடர்பாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை பற்றி அடிப்படையினை ஈடுபடுத்திக் கொள்ளுதலின் ஏற்புடைத் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் முடிவு செய்வேனாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாகவான வெளிப்படுத்தல்களுக்கு என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனத்தினைச் செலுத்த வேண்டியதுடன், அவ் வெளிப்படுத்துதல்கள் போதுமானளவு அற்றதாயின் எனது அபிப்பிராயத்தினை திருத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் மீது தொடர்ச்சியான நிலவுகை முடிவடைய இயலும்.
- வெளிப்படுத்தப்படுதல்கள் உள்ளடங்களான நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு, சட்டகம் மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பாய்விற்கு உட்படுத்தியதுடன் அது தொடர்பாக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உகந்த மற்றும் நியாயமான விதமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை செய்யும் தரப்பினர் அறிவூட்டப்பட்டனர்.

**2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

- o 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு தொடர்பாக அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின் வாயிலாக தெரியக் கூடியதாக உகந்த நிதி அறிக்கைகள் நிதியத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.
- o 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம்

நிதியம் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்கள் முற்போந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

- o 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முற்போந்த வருடத்தில் என்னால் நிகழ்த்தப்பட்ட விதப்புரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்குள் எல்லைப்படுத்துதலின் வாயிலாக, கீழ்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவிற்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்குள் ஈர்க்கப்படவில்லை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் ஆளும் குழுவின் யாதேனும் உறுப்பினர் ஒருவருக்கு நிதியத்துடன் தொடர்புபட்டு யாதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பொதுவான வர்த்தக நிலைமைகளுக்கு அப்பால் தொடர்பு உள்ளது என.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பினைத் தவிர யாதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது நிதியத்தின் ஆளும் குழுவால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொது அல்லது விஷேட பணிப்புகளுக்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் | விபரம் |
|---|---|
| (i) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு | அமைச்சின் செயலாளரினால் ஒவ்வோர் நாட்காட்டி வருடம் முடிவடைந்த பின்னர் இயன்றவிரைவில் நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியிருப்பினும் மீளாய்வு வருடம் தொடர்பாக அவ்வாறானதோர் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுக் காணப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | விநியோகிக்கப்பட்ட எனினும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த 6 மாதங்களைக் கடந்த ரூ. 4,121,664 பெறுமதியுடைய 108 காசோலைகள் தொடர்பாக ஏற்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளாது, நானாவித வைப்புக் கணக்கில் 102 காசோலைகள் மற்றும் வங்கி இணக்கக் கூற்றில் 06 காசோலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழ்தரப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் பெறப்பட்டுப் பயனபடுத்தப்படவில்லை என.

**(அ) முகாமைத்துவச் செயற்பாடுகள்**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தேசிய வருமான சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய விளையாட்டு நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் முதலீடு தொடர்பாக கிடைக்கப் பெறும் வட்டி நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டதென இசைவுப் பத்திரம் ஒன்றினை பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக மீளாய்வு வருடத்தினுள் 4 சந்தர்ப்பங்களில் ரூ. 432,645 நிறுத்தி வைத்தல் வரியானது செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 25(1) பிரிவின் பிரகாரம் நிதியமானது அமைச்சின் செயலாளரால் நிர்வாகம் செய்யப்பட வேண்டிருப்பினும், அது தொடர்பாக மீளாய்வு வருடத்திற்கு ஏற்புடையதாக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கப்படவில்லை.

**(இ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கள்கள்**

2017 ஆம் வருடத்தில் மற்றும் மீளாய்வு வருடத்தினுள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் சேவையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர் 4 பேருக்கு நிதியத்தின் வாயலாக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் கொடுப்பனவாக ரூ. 1,185,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருப்பினும், அவ் உத்தியோகத்தர்கள் 4 பேருக்கும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அவர்களின் செயலாற்றுகை பற்றி மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை. மேலும் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் 4 பேரில் இருவர் தொடர்பாக பொதுநலவாய நாடுகளின் பாரந்தூக்கல் போட்டித் தொடரில் பயிற்றுவிப்பாளராக போட்டி வெற்றி தொடர்பாக ரூ. 1,600,000 பணமானது நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(உ). உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------------------

மீளாய்வு வருடம் தொடர்பாக நிதியத்தின் வருமானம் ரூ. 61.9 மில்லியன் ஆகவும் செலவினம் ரூ. 88 மில்லியன் ஆகவும் காணப்பட்டதுடன் நிதியத்திடம் மீளாய்வு வருடம் முடிவடையும் போது காணப்பட்ட சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூ. 139 மில்லியன்களாகும். நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்பட்டிருக்க வேண்டுமெனினும் நிதியம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிராததுடன், அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலமாகவோ கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

**(ஊ). பாதீட்டு ஆவணமயக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினம் என்பனவற்றை ஒப்பிடும்போது 13 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக 19 சதவீதத்திலிருந்து 346 சதவீதம் வரையில் வேறுபாடுகள் அவதானிக்கபட்டமையினால் பாதீடு விளைதிறன் மிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் காரணி ஒன்றாக ஈடுபடுத்தப்பட்டு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

டப்.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி